பக்கங்கள்: 05

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 06 வெள்ளிக்கிழமை 22.07.2022 கதிர் 148

## புதிய பிரதமராக தினேஷ் நியமனம்

**ரணில் முன்னிலையில் பதவியேற்பு**



இலங்கையின் புதிய பிரதமராக தினேஷ் குணவர்தன பதவியேற்றுள்ளார்.

இன்று முற்பகல் 10.20 மணியளவில் அவர் ☞2

# இடைக்கால அரசின் புதிய அமைச்சரவை; 18 பேர் இன்று பிற்பகல் பதவிப்பிரமாணம்

## பழைய முகங்களே மீண்டும்; ராஜபக்ஷக்கள் எவரும் இல்லை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான இடைக்கால அரசின் புதிய அமைச்சரவை இன்று பதவியேற்றது.

பிற்பகல் ஒரு மணியளவில் பிரதமர் செயலகத்தில் அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது 18 பேர் ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

இவர்களில் பெரும்பான்மையானோர் இதற்கு முன்னர் இருந்த அமைச்சரவையில் பதவி வகித்தவர்களாவர்.

புதிய அமைச்சரவையில் ஒரு ராஜபக்சகூட இல்லை. மக்கள் எதிர்ப்பால் அவர்களில் எவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை.

புதிய அமைச்சரவை விபரம் வருமாறு:–


01. பிரதமர் தினேஷ் குணவர்தன – உள்ளூராட்சி மற்றும் அரச நிர்வாக அமைச்சர்

02. சுசில் பிரேம ஜயந்த – கல்வி அமைச்சர்

03. டக்ளஸ் தேவானந்தா – கடற்றொழில் வளங்கள் அமைச்சர் ☞2







# காலிமுகத்திடலில் இராணுவ அராஜகம்; அடித்துவிரட்டப்பட்ட போராட்டக்காரர்கள்

* நொருக்கப்பட்டன கூடாரங்கள்
* 15 பேர் காயம்; 9 பேர் கைது
* ஊடகவியலாளர் மீதும் அடி உதை
* ஜனாதிபதி செயலகம் முழுமையாகப் படை வசம்
* இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சட்டத்தரணிகள் சங்கமும் கடும் கண்டனம்
* ஐ.நாவும், வெளிநாடுகளும் ஆழ்ந்த கவலை

கொழும்பு, ஜூலை 22

கொழும்பு-காலிமுகத்திடலில்ஜனாதிபதிசெயலகத்துக்கு முன்பாக இருந்த அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் அங்கிருந்து படையினரால் அடித்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இன்று அதிகாலை 1.30 மணியளவில் ஜனாதிபதி செயலக வளாகப் பகுதிக்குள் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினருடன் பிரவேசித்த முப்படையினர், போராட்டக்காரர்களை அங்கிருந்து கலைத்தனர். எதிர்ப்புக் காட்டியவர்கள் மீது அவர்கள் மிலேச்சத்தனமான தாக்குதல்களையும் மேற்கொண்டதுடன் சட்டத்தரணி ஒருவர் உட்படப் பலரைக் கைதுசெய்தனர். ☞2

## வன்முறையைக் கண்டித்து கோட்டையில் ஆர்ப்பாட்டம்



கொழும்பு – காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது இன்று அதிகாலை பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக் குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ☞2

## காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவத்துக்கு சர்வதேச மன்னிப்புச் சபையும் கண்டனம்

காலிமுகத்திடலில் அமைதியான போராட்டத்தளம் மீது இன்று அதிகாலை பொலிஸார் மற்றும் படையினரால் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவங்களை சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்துள்ளது.

இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் உடனடியாக பதவி விலக வேண்டும் என்றும், எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

இத்தகைய ☞2

## நீர்த்தேக்கத்தில் குதித்து மாணவி உயிர்மாய்ப்பு!

தலவாக்கலை – மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தில் குதித்து மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

உயிரிழந்த மாணவி லிந்துலை – மிளகுசேனை தோட்டத்தில் வசித்து வந்த 19 வயதுடைய முத்துரத்தினம் ஜிலோனி எனத் தெரியவந்துள்ளது.

லிந்துலை – சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் ☞2

## சிங்கப்பூரில் கோட்டாபய குறுகிய கால விசாவுடன்

**இந்திய ஊடகங்கள் செய்தி**



இம்மாதம் 14 ஆம் திகதி தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு வருகை தந்த இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 15 நாள்களுக்கான குறுகிய கால ☞2

## பாதுகாப்புச் செயலராக மீளவும் கமல் குணரத்ன



ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன மீண்டும் பாதுகாப்பு அமைச்சின்செயலாளராகநியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். ☞2

## டலஸை ஆதரித்த பீரிஸுக்கு 'வெட்டு'



இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின்போது டலஸ் அழகப்பெருமவின் ☞2

## காலிமுகத்திடலில் இராணுவ அராஜகம்; ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்களையும் அவர்கள் அடித்து நொருக்கினர்

அதன்பின்னர் ஜனாதிபதி செயலகம் முதல் காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட இடம் வரையான பகுதியை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் படையினர் கொண்டு வந்தனர்.

இந்தப் பகுதியில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த பி.பி.சி. உலகச் சேவை ஊடகவியலாளர் ஒருவர் மீதும் படையினரால் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், அவரின் கைத்தொலைபேசியில் இருந்த வீடியோவும் அழிக்கப்பட்டது.

முப்படையினர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து இன்று அதிகாலை ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதான நுழைவாயில் உள்ளிட்ட வளாகங்களில் தங்கியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றிய வேளையில் 9 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இவர்கள் களனி, எம்பிலிப்பிட்டி, ஜா – எல, இரத்தினபுரி, வெல்லம்பிட்டி, வாதுவ, நுகேகொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26 முதல் 58 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் தமது தரப்பில் 15 பேர் காயமடைந்துள்ளனர் என்று அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

**கண்டனங்கள்**

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர்கள் கலைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பல்வேறு தரப்புகளும் கடுமையான கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

**மனித உரிமைகள் ஆணைக்குழு**

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் மீது மேற்கொள்ளப்பட்ட மூர்க்கத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மக்களின் அடிப்படை உரிமைகளை நிறைவேற்றும் தரப்பினர் முற்றிலும் மீறும் செயல் இது என்று ஆணைக்குழு தமது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் ஆணைக்குழு பொலிஸாரை அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் அல்லது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலான செயல்கள் எதிர்காலத்தில் இடம்பெறமாட்டா என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே, சட்டத்தின் ஆட்சி பேணப்படுவதை உறுதி செய்வதற்காகத் தமது தரப்பில் சுயாதீனமாக விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

**சட்டத்தரணிகள் சங்கம்**

காலிமுகத்திடல் மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அரச படைகளால் பிரயோகிக்கப்பட்ட வன்முறை நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது சட்டத்தரணி நுவான் போபகே உட்படப் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். மக்களும் தாக்கப்பட்டுள்ளனர். கைதானவர்கள் அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும். அவர்கள் இருக்கும் இடம் தெரியப்படுத்தப்பட வேண்டும். தேவையற்ற ஈவிரக்கமற்ற பலத்தைப் பயன்படுத்துவது இந்த நாட்டுக்கும் அதன் சர்வதேச நற்பெயருக்கும் உதவாது – என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

**ஐ.நா.**

காலிமுகத்திடல் போராட்டக்காரர்களைக் கலைக்கப் படையினரைப் பயன்படுத்தியமை கவலையளிக்கின்றது என்று ஐ.நா. சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு ஆர்ப்பாட்டங்களைக் கண்காணிக்க உரிமை உண்டு. எனவே, அவர்களின் செயற்பாடுகளுக்குத் தடை ஏற்படுத்தப்படக் கூடாது – என்றும் அவர் குறிப்பிட்டார்.

**அமெரிக்கா**

ஜனாதிபதி செயலகம் மற்றும் காலிமுகத்திடலுக்கு அருகாமையில் ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றுவதற்கு ஆயுதப்படைகளை அரசு அனுப்பியமை குறித்து பல நாடுகளின் தூதுவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்கத் தூதுவர் ஜுலி சுங், காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆழ்ந்த கவலையடைகின்றேன் – என்று கூறியுள்ளார்.

அதிகாரிகளால் இது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும், காயமடைந்தவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவியை வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

**பிரிட்டன்**

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன், காலிமுகத்திடல் போராட்டத் தளத்தில் இருந்து வரும் அறிக்கைகள் குறித்து மிகவும் கவலையடைகின்றேன். அமைதியான போராட்டத்துக்கான உரிமையின் முக்கியத்துவத்தைப் பிரிட்டன் தெளிவுபடுத்தியுள்ளது – என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

**கனடா**

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மெக்கின்னன், காலிமுகத்திடல் போராட்டத் தளத்தில் என்ன நடக்கின்றது என்று கேட்கிறேன். இப்போது ஏன் இப்படி நடக்கின்றது என்று தெரியவில்லை. அதிகாரிகள் நிதானத்துடன் செயற்படுவதும், வன்முறையைத் தவிர்ப்பதும் முக்கியம் – என்று தெரிவித்துள்ளார்.

**நியூசிலாந்து**

இலங்கைக்கான நியூசிலாந்துத் தூதுவர் மைக்கல் எப்பல்டன், காலிமுகத்திடலில் இடம்பெற்ற சம்பவங்கள் கவலையளிக்கின்றன. பேச்சு சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் அமைதியான போராட்டத்துக்கான உரிமை ஆகியவை அனைத்து சுதந்திரமான சமூகங்களின் அடித்தளமாகும். எனவே, அவை பாதுகாக்கப்பட வேண்டும் – என்று குறிப்பிட்டுள்ளார்.

## சிங்கப்பூரில் கோட்டாபய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசா வழங்கப்பட்டது எனச் சிங்கப்பூர் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளை மேற்கோள்காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோட்டாபய ராஜபக்ச விமானம் மூலம் நாட்டுக்குள் பிரவேசித்த சந்தர்ப்பத்தில் இந்தக் குறுகிய கால விசா வழங்கப்பட்டது எனச் செய்தி வெளியாகியுள்ளது.

பொதுவாக இலங்கையர்களுக்கு 30 நாட்களுக்கு விசாவை நீடிக்க முடியும் எனவும், அதற்கு ஒன்லைன் மூலம் விண்ணப்பிக்க வேண்டியுள்ளது எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாதுகாப்புச் செயலராக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கமல் குணரத்ன, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டலஸை ஆதரித்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயரை வழிமொழிந்து – அவருக்கு நேசக்கரம் நீட்டிய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸிடமிருந்து வெளிவிவகார அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் புதிய வெளிவிவகார அமைச்சராக ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டாவின் ஆட்சியில் பீரிஸே வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், ஜனாதிபதி தெரிவின்போது பீரிஸ், டலஸ் அழகப்பெருமவுக்குச் சார்பாகச் செயற்பட்டார். இதனால் 'மொட்டு'க் கட்சிக்குள் முறுகல் நிலை ஏற்பட்டது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே புதிய அரசில், பீரிஸ் ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

இதேவேளை, நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை. விமான விவகாரம் தொடர்பான விசாரணை முடியும்வரை அவர் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

ஏற்கனவே மேற்படி விடயமானங்களை வகித்தவர்களுக்கு அதே அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பெண்கள் எவரும் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படவில்லை. அடுத்து வரும் நாள்களிலும் அமைச்சர்கள் சிலர் பதவியேற்கவுள்ளனர். இதன்போது பெண் பிரதிநிதித்துவத்துக்கு இடமளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சு ஜனாதிபதிவசம் இருக்கும். அடுத்த அமைச்சரவை நியமனத்தின்போது புதிய நிதி அமைச்சர் நியமிக்கப்படலாம்.

## வன்முறையைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் அமைப்புக்கள் மற்றும் ஏனைய தரப்பினர் இணைந்து கொழும்பு – கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இன்று முற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## காலிமுகத்திடல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறைச் செயல்களை இலங்கை அதிகாரிகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், சட்டவிரோதமாகக் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு கேட்டுள்ளது.

போராட்டக்களத்துக்குச் செல்வதற்கு ஊடகவியலாளர்களுக்குத் தடை விதிக்கக்கூடாது என்றும், ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு, அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளது.

ஊடகவியலாளர்கள் தங்கள் பணியைச் செய்யவிடாமல் தடுப்பது ஊடகச் சுதந்திரத்தை நேரடியாக மீறுவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## நீர்த்தேக்கத்தில் குதித்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்தர வகுப்பில் கல்வி பயின்று வரும் குறித்த மாணவி, இன்று தலவாக்கலை பகுதியில் உள்ள தனியார் வகுப்புக்குச் சென்றிருந்த வேளையிலேயே நீர்த்தேக்கத்தில் குதித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

தற்கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



## புதிய பிரதமராக ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி – பிளவர் வீதியில் அமைந்துள்ள பிரதமர் செயலகத்தில் இந்தப் பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றது.

சிரேஷ்ட இடதுசாரி தலைவர்களுள் ஒருவரான பிலிப் குணவர்தனவின் மகனே தினேஷ் குணவர்தன.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வகுப்புத் தோழன். பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்.

அவர் 1977 ஆம் ஆண்டில் அரசியலில் காலடி வைத்தார். 1983 ஆம் ஆண்டு முதன்முறையாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகினார்.

அதன்பின்னர் 1994 ஆம் ஆண்டு தேர்தலில் அவர் தோல்வியடைந்து இருந்த போதிலும், 2000 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார்.

கடந்த காலங்களில் ராஜபக்ஷ அரசில் கல்வி, வெளிவிவகார உட்பட பல முக்கிய அமைச்சுப் பதவிகளையும் அவர் வகித்து வந்தார்.

## இடைக்கால அரசின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

04. கெஹலிய ரம்புக்வெல– சுகாதாரத் துறை அமைச்சர்

05. பந்துல குணவர்தன – போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர்

06. மஹிந்த அமரவீர – விவசாயத் துறை மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர்

07. விஜயதாஸ ராஜபக்ஷ – நீதி, அரசமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலை விவகார அமைச்சர்

08. ஹரின் பெர்னாண்டோ – சுற்றுலாத் துறை மற்றும் காணி விவகாரத்துறை அமைச்சர்

09. ரமேஷ் பத்திரன – பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர்

10. பிரசன்ன ரணதுங்க – நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர்

11. அலி சப்ரி – வெளிவிவகாரத்துறை அமைச்சர்

12. விதுர விக்கிரமநாயக்க – பௌத்த மதம் மற்றும் மத விவகார அமைச்சர்

13. கஞ்சன விஜேசேகர – வலுசக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்

14. நஸீர் அஹமட் – சுற்றாடல்துறை அமைச்சர்

15. ரொஷான் ரணசிங்க – விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்

16. மனுஷ நாணயக்கார – வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சர்

17. டிரான் அலஸ் – பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

18. நளின் பெர்னாண்டோ – வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கசப்பு மருந்து

தீக்குச்சை கொண்டு விளக்கையும் ஏற்றலாம். வீட்டையும் கொளுத்தலாம். தீக்குச்சி என்ற வலிமையை வைத்து என்ன செய்யப் போகின்றோம், எப்படிக் கையாள போகின்றோம் என்பதில்தான் நமது பணியின் மகத்துவம் தங்கி இருக்கின்றது. எல்லை மீறாமல் அந்த வேலையை ஆற்ற வேண்டும்.

'கோட்டா கோ கம' போராட்ட விடயத்திலும் இதுதான் நிலைமை. தென்னிலங்கை அரசியல் எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும். தமிழர்களைப் பொறுத்தவரை 'கோட்டா கோ கம' போராட்டம் தொடர்பில் அவர்கள் மத்தியில் ஒரு பின்னடிப்பு ஆரம்பம் தொடக்கமே இருந்தது. சுமந்திரனையும் சாணக்கியனையும் தவிர, தமிழர் தரப்பு அந்தப் போராட்டத்தில் அதிக ஈடுபாடு காட்டவில்லை. அதற்காக அந்தப் போராட்டங்களை எதிர்க்கவும் இல்லை. வாழ்த்தி, ஆசீர்வாதம் தந்ததோடு வெறும் பார்வையாளர்களாக சிறுபான்மையினர் தள்ளி நின்று விட்டனர்.

சுமந்திரனும் சாணக்கியனும் அந்தப் போராட்டக்காரர்களுக்கு அளவுக்கு மிஞ்சிக் கழுவிக் கொடுத்தார்கள். எனினும் அது அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் கருத்தியலாக அமையவில்லை என்பது கண்கூடு.

எதேச்சாதிகார ஆட்சியாளரான கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் திரண்டனர் என்பது உண்மை. ஜுலை 9 வரை அந்தப் போராட்டம் சரியான திசையில் நகர்ந்தது என்பதுன் வாஸ்தவம்தான்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதை இந்த பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம். மீளவும் சுட்டிக்காட்டுவது அவசியமானது. போராட்டத்திற்கு பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டமை கோட்டாவையும் அவரது ராஜபக்ஷ ஆட்சிப் பீடத்தையும் அகற்றுவதற்கான ஒரே கருத்தில்தான். அதற்கு அப்பால் அந்தப் போராட்டத்தை ஒழுங்குபடுத்திய – ஏற்பாடு செய்த – தனிக்குழுக்கள், கட்சிகள், பிரிவுகள் அவற்றுக்கு ஒத்து ஊதிய சுமந்திரன் – சாணக்கியன் போன்ற தரப்புகளின் தம்மிஷ்டப்படியான அரசியல் நிலைப்பாட்டை அங்கீகரித்து அவற்றை முன்னெடுக்க அல்ல.

கோட்டாபயவை கலைத்தாயிற்று. அதற்கும் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. நியாயமான உரிமைகளுக்காகவும், தங்கள் இருப்புக்காகவும், தங்கள் கௌரவ வாழ்வுக்காகவும் தங்களையே ஆகுதியாக்கிப் போராடிய தமிழ் போராளிகளை 'பயங்கரவாதிகள்' என்றோர், அந்தப் போராட்டத்தை ஏற்று அங்கீகரிக்க மறுத்தோர் – நம்மவர்கள் உட்பட – இந்த 'அறகல்ய' வன்முறையை அங்கீகரித்தனர். அதை முன்னெடுத்தவர்களை 'போராளிகள்', 'சமூக வழிகாட்டிகள்' என்று தலையில் வைத்துக் கூத்தாடினர்; கூத்தாடுகின்றனர்.

மக்கள் எதற்கும் திரண்டு வந்தார்களோ அதற்கான விடயம் ஒப்பேறிவிட்டது. இப்போது அந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள், அந்த மக்கள் எழுச்சியின் பெயரால் தங்கள் அரசியல் திட்டங்களை முன்னெடுக்க – நகர்த்த – முயலுகின்றனர். அதற்குத்தான் இப்போது ஆப்பு வைக்கப்பட்டிருக்கிறது.

மிக மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் நாட்டை முன்நகர்த்துவதற்கு அடுத்த ஒரு வருடத்துக்காவது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேணுவது அவசியம். கோட்டாபயவைக் கலைத்த பின்னரும் அந்தப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட தரப்புகளின் விருப்பு, வெறுப்புக்கெல்லாம் இழுபடும் குழப்பங்களுக்கு இடமளித்தால் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை கிட்டாது. மீட்சியும் இல்லை.

நோய் குணமாக சில கருத்து கசப்பு மருந்துகளை உள்ளெடுத்துத்தான் ஆக வேண்டும். அது தவிர்க்க முடியாதது.

# அமெரிக்க இராஜாங்க திணைக்கள ஆட்கடத்தல் அறிக்கையில் இலங்கை தரமுயர்த்தப்பட்டுள்ளது

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட ஆட்கடத்தல் தொடர்பான அறிக்கை 2022 இன் பிரகாரம் இலங்கையை அடுக்கு 2 இற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் –

இலங்கையின் தேசிய ஆள்கடத்தல் தடுப்பு செயலணிக்கு தலைமை வகிக்கும் பாதுகாப்பு அமைச்சு இது தொடர்பான அறிவித்தலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றது.

இலங்கை கடந்த மூன்று ஆண்டுகளாக அடுக்கு 2 கண்காணிப்பு பட்டியலில் தொடர்ந்து இருந்த நிலையில் அடுக்கு 3 இற்கு தரமிறக்கப்படக்கூடிய நிலையில் அமெரிக்க உதவி மற்றும் பலதரப்பு அபிவிருத்தி வங்கிகளின் உதவிகள் பெறுவதில் சில கட்டுப்பாடுகள் இருந்த நிலை காணப்பட்டது.

ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் அமெரிக்க சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஆட்கடத்தல் அறிக்கை, மனித கடத்தல் தொடர்பில் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் தொடர்புகொள்ள அமெரிக்க அரசாங்கத்தின் முக்கிய இராஜதந்திர கருவியாகக் கருதப்படுகிறது. மேலும் ஆட்கடத்தலுக்கு எதிரான முயற்சிகளின் உலக நாடுகளுக்கு மத்தியிலுள்ள மிகவும் விரிவான ஆதாரமாகவும் இது அறியப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் ஆட்கடத்தலை ஒழிப்பதற்கான குறைந்தபட்ச தரங்களை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை என்பதை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அவதானிக்கும் அதேவேளை (அடுக்கு 1 இல் இடம் பெற தேவைப்படும்) அது தொடர்பில் இலங்கை கணிசமான முயற்சிகளை மேற்கொண்டு வருவதை அங்கீகரித்துள்ளது.

முந்தைய அறிக்கையிடல் காலத்துடன் ஒப்பிடுகையில், அதன் ஆட்கடத்தல் எதிர்ப்புத் திறனில் கொவிட் – 19 இன் தாக்கத்தை கருத்தில் கொண்டு, முயற்சிகள் அதிகரித்துள்ளன.

தேசிய ஆட்கடத்தல் தடுப்பு செயலணியின் உறுப்பினர்களான வெளிவிவகார அமைச்சு, நீதி அமைச்சு, தொழில் அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல், முன்னாள் இராஜாங்க அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, சுற்றுலா அமைச்சு, சமுர்த்தி இராஜாங்க அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஆட்கடத்தல், கடத்தல் மற்றும் கடல்சார் குற்ற விசாரணைப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், தொழில் திணைக்களம், பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் தடுப்பு பணியகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை, குற்றப் புலனாய்வுப் பகுப்பாய்வு மற்றும் தடுப்புப் பிரிவு, கொழும்பு பிரதம சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆகியவற்றின் மூத்த அதிகாரிகள், தேசிய ஆட்கடத்தல் தடுப்பு செயலணியின் தலைவரான, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) நியமித்த அதிகாரிகள் குழுவின் தலைமையை வகிக்கும் தேசிய புலனாய்வுப் பிரதானியின் அலுவலகத்தின் கீழ் தேசிய மூலோபாய செயல் திட்டம் 2021 – 2025 இற்கமைய இலங்கையில் ஆட்கடத்தலை கண்காணித்து எதிர்த்துச் செயற்பட மிகுந்த அர்ப்பணிப்புடனும் ஒன்றுபட்ட உணர்வுடனும் பணியாற்றினர்.

ஆட்கடத்தல் அறிக்கை முன்னுரிமைப்படுத்தியுள்ள பரிந்துரைகளை தேசிய ஆட்கடத்தல் தடுப்பு செயலணி முழுவதுமாக அடைவதற்கும் ஆட்கடத்தல் குற்ற நடவடிக்கைகளை நாட்டிலிருந்து ஒழித்துக்கட்ட முழு அர்ப்பணிப்புடன் செயற்படும்.

# இலங்கை நெருக்கடி மனித உரிமைகள் மீது பாரியளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன

## ஐ.நா. நிபுணர் சுட்டிக்காட்டு

இலங்கையில் பணவீக்கம் அதிகரிப்பு, பொருள்களின் விலை அதிகரிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்சார பற்றாக்குறை, பொருளாதார வீழ்ச்சி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் நிபுணர் கவலை வெளியிட்டுள்ளார்.

வெளிநாட்டு கடன் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் விசேட நிபுணர் அட்டியா வாரிஸ் இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி நாட்டு மக்கள் மனித உரிமைகளை அனுபவிப்பதன் மீதும் பெரும்தாக்கத்தை செலுத்தியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மீண்டும் மீண்டும் நாடுகளின் மீது கடன் நெருக்கடி ஏற்படுத்தியுள்ள மோசமான விளைவுகளை நாங்கள் பார்த்திருக்கின்றோம் எனத் தெரிவித்துள்ள அவர் கடன்நெருக்கடி உலக நிதி அமைப்பின் ஆழமான கட்டமைப்பு இடைவெளிகளை அம்பலப்படுத்தியுள்ளது. மேலும் மனிதஉரிமைகளை நடைமுறைப்படுத்துவதை பாதித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கான எந்த முயற்சியினதும் அடிப்படையாக மனித உரிமைகள் காணப்படவேண்டும். சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சின் சூழமைவும் அவ்வாறானதாகக் காணப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2019 இல் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அதிகரிக்கும் கட்டமைப்பு கடன் தொடர்பாக ஐ.நா. நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். அந்த அறிக்கையில் நாட்டின் அதிகளவு செலவீனமாக காணப்படுவது கடன் செலவீனமே எனத் தெரிவித்திருந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வீழ்ச்சி உலகின் கவனத்தை உடனடியாக ஈர்க்கவேண்டும். மனிதாபிமான அமைப்புகள் மாத்திரமின்றி சர்வதேச நிதியமைப்புகள், தனிப்பட்ட கடன் வழங்குநர்கள் மற்றும் ஏனைய நாடுகள் இலங்கையின் உதவிக்கு முன்வரவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யோகக்கலை வகுப்புகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை கற்கைநெறி நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 02.08.2022 அன்று நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவத் திருவிழா ஆரம்பமாகவிருப்பதால் திருவிழாக்காலங்களில் வீதித் தடைகள் போடப்படுவதன் காரணமாக அந்தப் பாடசாலையில் வகுப்புகளை நடத்த முடியாத காரணத்தால் தற்காலிக ஏற்பாடாக திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் 06.08.2022 ஆம் திகதியிலிருந்து நடைபெறும் என இளைஞர் விவகார அலகின் உதவிச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இக் கற்கைநெறி சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் 8 மணிவரை நடைபெறுகின்றன.

இந்த வகுப்புகளில் 19 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கலந்துகொண்டு பயிற்சி பெற்றுவருகின்றனர்.

சுமார் மூன்று மாதகாலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இனநல்லுறவைப் பேணும் வகையில் மொனராகலைக் குழு மட்டு விஜயம்





(க.கிருபாகரன்)

இனநல்லுறவைப் பேணுவதன் ஊடாக எதிர்காலச் சமூகத்தைக் கட்டியெழுப்பும் நோக்கோடு, ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலய சுகாதாரக் குழுவின் அழைப்பின் பேரில் மொனராகலை மாவட்டத்திலிருந்து பௌத்த மதக் குருமார்களின் தலைமையில் சமூக ஆர்வலர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் மட்டக்களப்புக்கான சினேகபூர்வ சுற்றுலாவை மேற்கொண்டு நேற்றைய தினம் வருகை தந்தனர் என மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

இவர்கள் நேற்றுக் காலை மட்டக்களப்பு மாநகர சபையைப் பார்வையிட்டமையோடு, உள்ளூராட்சி மன்றங்களில் மாநகரசபையின் தனித்துவம், மாநகர முதல்வரின் வகிபங்கு, சபை அமர்வுகள், திண்மக் கழிவகற்றல் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பணிகள் போன்ற பல்வேறு விடயங்களை அறிந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாநகரசபையின் எழிலை மேலும் மெருகூட்டும் வகையில் மட்டக்களப்பு மாநகர முதல்வரிடம் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநகர சபை உறுப்பினர்களான துரைசிங்கம் மதன், யூ.பிலிப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## அல்ஹித்மதுல் உம்மா பௌண்டேசனினால் சுற்றுமதில் திறப்பு, உபகரணங்கள் வழங்கல்




(ஹஸ்பர்)

தந்தையை இழந்த பிள்ளைகள் கற்றுவரும் மூதூர் அத்பால் கல்வி நிலையத்துக்கான சுற்று மதில் திறப்பும் உபகரணங்கள் கையளிப்பும் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றன .

இக்கல்வி நிலையத்துக்கு அல் ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனின் ஏற்பாட்டினால் 300 அடி சுற்று மதில் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன் இக்கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான 30 டம்ரோ அலுமாரிகள், 30 கட்டில்கள், 30 மெத்தைகள் வழங்கப்பட்டன.

மேலும் மின் துண்டிக்கப்படும்போது கற்றல் நடவடிக்கை பாதிக்கப்படாமல் இருப்பதற்காக ஜெனரேட்டர் ஒன்றும் வழங்கப்பட்டது.

அதேநேரம், டீபிரசர் பிரிட்ஜ், கற்றலுக்குத் தேவையான கதிரைகள், மேசைகள் போன்றனவும் வழங்கப்பட்டு கல்வி நிலையம் புனரமைப்பும் செய்து கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் துருக்கி நாட்டு தொண்டு நிறுவனமான IHHNL நிறுவனத் தூதுவர் முஸ்தபா குரு. அவரின் பாரியார் கயா, அல்ஹித்மதுல் உம்மா பௌண்டேசனின் தலைவர் கஸ்ஸாலி முகம்மது பாத்திஹ், மூதூர் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தி யோகத்தர் ஆகியோருடன் ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## 521லீற்றர் டீசலை தம்புள்ளைக்கு கொண்டு சென்ற ஒருவர் கைது!

### கந்தளாயில் சம்பவம்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிபத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் 521லீற்றர் டீசலை லொறியொன்றில் கொண்டு சென்ற ஒருவரை கந்தளாயில் வைத்து கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதீப் தெரிவித்தார். வியாழக்கிழமை கைது செய்துள்ளதாக பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தம்புள்ளை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என கந்தளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதீப் தெரிவித்தார்.

சந்தேக நபர் சட்டவிரோதமான முறையில் கந்தளாய் பிரதேசத்தில் 850 ரூபாவுக்கு வாங்கி தம்புள்ளை பகுதிக்கு கூடுதலான விலைக்கு விற்பதற்காக சிறிய லொறியொன்றில் கொண்டு சென்ற போதே கந்தளாய் குற்றத்தடுப்பு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு கந்தளாய் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் டீசலை கொண்டு செல்வதற்காக பயன்படுத்திய லொறி கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## மட்டக்களப்பில் எரிபொருள் நிலையத்தில் குழப்பநிலை!

### பொலிஸார் குவிப்பு

மட்டக்களப்பு – போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம், பொதுமக்களால் முற்றுகையிடப்பட்டு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் பணிகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வெல்லாவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வியாழக்கிழமை மாலை எரிபொருள் வந்த நிலையில் அதனை மக்களுக்கு வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் போது சிலர் எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கையை குழப்பும் வகையில் செயற்பட்டதால் எரிபொருள் விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக மக்கள் எரிபொருளுக்காக நீண்ட நேரம் காத்திருந்த நிலையில், சிலர் மேற்கொண்ட குழப்ப நிலை காரணமாக நீண்ட நேரமாக காத்திருந்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தை முற்றுகையிட்டதை தொடர்ந்து பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது அப்பகுதியில் தொடர்ந்து பதற்ற நிலைமை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருகோணமலையில் விபுலானந்தரின் 75 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள்





(ஹஸ்பர்)

சுவாமி விபுலானந்தரின் 75 ஆவது ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக நேற்று திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரியிலும் விபுலானந்தா நூற்றாண்டு விழாச்சபையின் ஏற்பாட்டில் சுவாமிக்கான நினைவேந்தலும், அறநெறி பாட ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வும் தொடர்ந்து கடந்த இரண்டு வருடங்களாகக் கல்வி சேவையில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கான கௌரவிப்பும் நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் திருகோணமலை விவேகானந்தா கல்லூரி மற்றும் திருகோணமலை விபுலானந்தா கல்லூரி பாடசாலைகளில் அமையப்பெற்ற சுவாமியின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் ஆதினகர்த்தா வேதாகமமாமணி பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள், விபுலாநந்தர் நூற்றாண்டு விழா சபையினுடைய தலைவர் கோ.செல்வநாயகம், செயலாளர் தி.ரூபாகர், பொருளாளர் க. தமிழ்ச் செல்வன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

# எதிர்க்கட்சியிலிருந்து ரணிலுக்கு ஆதரவாக ஓர் உறுப்பினர்கூட வாக்களிக்கவில்லையாம்!

## திடமாக நம்புகிறார் ரஞ்சித் மத்தும பண்டார



புதிய ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பின்போது ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தோ அல்லது எதிர்க்கட்சிகளில் இருந்தோ ஓர் உறுப்பினர்கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அவர் –

நாடாளுமன்றில் மக்களின் நிலைப்பாடு தானா வெளிப்பட்டது என கேட்க விரும்புகிறேன்? 2019 மற்றும் 2020 இல் இருந்த நிலைப்பாட்டிலிருந்து மக்கள் முற்றாக மாறிவிட்டார்கள்.

2020 இல் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு எதிராக, மக்கள் போராடிக் கொண்டிருக்கும்போது, அந்த உறுப்பினர்களாலேயே புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருடர்களை வெளியே விரட்ட வேண்டும் எனக் கோரியே மக்கள் போராடி வருகிறார்கள். ஆனால், இன்று அனைத்துத் திருடர்களும் ஒன்றிணைந்து ஜனாதிபதியாக ஒருவரை நியமித்துள்ளார்கள்.

இவர்கள் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கவே முற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். புதிய ஜனாதிபதி தெரிவின்போது, எமது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள் எனக் கூறப்படுகிறது.

ஆனால், அப்படி ஓர் உறுப்பினர்கூட அவருக்கு வாக்களிக்கவில்லை என்பதை நான் இவ்வேளையில் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

மேலும், எதிர்க்கட்சியிலுள்ள எந்தவொரு கட்சியினரும் அவருக்கு வாக்களிக்கவில்லை.

வாக்கெடுப்பின் ஊடாக எமது பலம் மேலும் அதிகரித்துள்ளது என்றே கூறவேண்டும். 64 ஆக இருந்த எமது பலம் இன்று 82 ஆக உயர்வடைந்துள்ளது.

20 ஆவது திருத்தத்துக்கு ஆளும் தரப்பில் 156 வாக்குகள் வழங்கப்பட்டன. ஆனால், நேற்றைய வாக்கெடுப்பின்போது 134 பேர் மட்டுமே வாக்களித்தனர்.

இதிலிருந்து அவர்களின் வீழ்ச்சியும், எமக்கான ஆதரவும் அதிகரித்துள்ளமையை புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும், வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டை மீட்டெடுக்க நாம் எம்மால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புக்களையும் செய்யத் தயாராகவே உள்ளோம்.

சர்வக்கட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கிறது. ஆனால், அது எவ்வாறு பயணிக்கப்போகிறது என்பதையே நாம் பார்க்க வேண்டும்.

எந்தத் தீர்மானமாக இருந்தாலும் கட்சியின் மத்தியக்குழுக் கூடியே முடிவுகளை எடுக்கும். – என்றார்.

## டெங்கு ஒழிப்பு தினமாக எதிர்வரும் 25 பிரகடனம்

எதிர்வரும் 25 ஆம் திகதியை டெங்கு ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

இந்தநிலையிலேயே எதிர்வரும் 25 ஆம் திகதி டெங்கு ஒழிப்புதினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நியமனம்!



ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## வெற்றிடமாகியுள்ள நாடாளுமன்ற ஆசனத்துக்கு யாரை நியமிப்பது?

### கட்சியின் முகாமைத்துவ குழு தீர்மானிக்கும் என்கிறார் ரங்கே

ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற ஆசனத்துக்கு ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விரைவாக ஒருவரின் பெயர் அறிவிக்கப்படும்.

அதுதொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய கட்சியின் முகாமைத்துவ குழு கூடி தீர்மானிக்க இருக்கின்றது என கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் நாடாளுமன்றத்தில் வெற்றிடமாகும் அந்த ஆசனத்துக்கு நியமிக்க இருக்கும் உறுப்பினர் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

2020 ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு எந்தவொரு ஆசனமும் கிடைக்கவில்லை.

என்றாலும் கட்சிக்கு கிடைத்த ஒரே ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்கு சென்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

என்றாலும் நாட்டில் ஏற்பட்ட மக்கள் போராட்டம் காரணமாக பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியமையைத்தொடர்ந்து, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அதனைத்தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்குரிய ரணில் விக்கிரமசிங்கவின் ஆசனம் வெற்றிடமாகி இருக்கின்றது.

இந்த வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பதென்று இதுவரை தீர்மானிக்கவில்லை. என்றாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் அடிப்படையில் கட்சியின் முகாமைத்துவ குழு கூடி விரைவாக ஒருவரை நாடாளுமன்றத்துக்கு பெயரிட நடவடிக்கை எடுப்போம். – என்றார்.

## வங்கியின் பெயரில் பணமோசடி அவதானமாகச் செயற்படுங்கள்!

### பொலிஸார் எச்சரிக்கை

ஹற்றன் மற்றும் அதனை அண்டிய பெருந்தோட்டப்பகுதிகளில் ஹற்றனில் அமைந்துள்ள தனியார் வங்கிக்கிளையின் பெயரில் சிலர் பணமோசடி செய்து வருகின்றனர் எனத் தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என ஹற்றன் மற்றும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசங்களின் தோட்டப்பகுதிகளுக்குச் செல்லும் குழுவினர் பிரான்ஸ் நாட்டின் நிதி உதவியுடன் தோட்டப்புற மக்களுக்கு வங்கிக் கடன் மற்றும் வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அதற்காக முதலில் 2 ஆயிரத்து 245 ரூபா செலுத்த வேண்டும் என்று கூறி ஹற்றன் கிளங்கன் தோட்டப்பிரிவில் பலரிடமும் பணம் பெற்றுச் சென்றிருக்கின்றனர்.

பணம் பெற்றுக்கொண்டதற்கான பற்றுச்சீட்டில் தனியார் வங்கியின் பெயர் இருப்பதை அறிந்த சிலர் ஹற்றனில் அமைந்துள்ள குறித்த வங்கிக்கிளையின் முகாமையாளரை நேரடியாக சந்தித்துள்ளனர். எனினும் இதை மறுத்த வங்கி முகாமையாளர் உடனடியாக ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி தோட்டப்பகுதி நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்டது என்பதால் அங்கும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாகத் தெரிவித்த தனியார் வங்கி முகாமையாளர், தமது வங்கியின் பெயரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்த முறையற்ற பண சேகரிப்பு தொடர்பாகப் பெருந்தோட்டப்பகுதி மக்கள் அவதானமாக இருக்கும்படியும் அவ்வாறு எவரும் வருகை தந்தால் அவர்கள் பற்றிய தகவல்களைக் கேட்டுப் பெறும் அதே வேளை தமது கையடக்கத் தொலைபேசியில் மேற்படி நபர்களை படம் பிடித்து கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை, இது தொடர்பில் அவதானமாக இருக்கும்படி தெரிவித்த பொலிஸார், இவ்வாறான நபர்களின் நடமாட்டம் தொடர்பாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது அவசர பொலிஸ் இலக்கத்துக்கோ அறிவிக்கும்படி கேட்டுள்ளனர்.

## ராஜபக்ஷ அரசைப் பாதுகாக்கும் ஒருவராகவே ரணில் செயற்படுவார்

### அரியநேத்திரன் வேதனை

ஜனாதிபதி வாக்களிப்பில் பலர் டலஸ் அழகப்பெருமவை நம்பவைத்து ஏமாற்றியுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கோட்டபய மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் நிழல் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் இன்றும் உள்ளதாகவும் அதனைப் பாதுகாக்கும் ஒருவராகவே தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார் எனவும் அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் கோட்டாபயவினை அழைத்து அவருக்கு ஓர் இடத்தை வழங்கி மீண்டும் முடிசூட வைத்தால்கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

## இளைஞர் படையின் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார் மயந்த!

ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் படையின் தலைவர் பதவியை மயந்த திசாநாயக்க இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கட்சியுடனான எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.07.2022இல் வெளியிடப்பெற்றது.